**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தி யவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(01.01.2025 முதல் 05.01.2025)**

**அறிக்கை எண் 80/2024** **தேதி. 31.12.2024**

## அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

அரியலூர் மாவட்டத்தின் 27.12.2024 முதல் 30.12.2024 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 30 - 31 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 89 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை அரியலூர் (01.01.2025 முதல் 05.01.2025)

| கடந்த வார வானிலை (27.12.2024 முதல் 30.12.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.01.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | தேதி | நாள்-1 01/01 | நாள்-2 02/01 | நாள்-3 03/01 | நாள்-4 04/01 | நாள்-5 05/01 |
| 1.4 | 5.9 | 0.3 | 3.4 | மழை (மி.மீ) | 4 | 3 | 2 | 0 | 2 |
| 30 | 31 | 31 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 29 | 30 | 30 |
| 24 | 23 | 22 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 25 | 25 |
| 6 | 7 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 5 | 5 |
| 87 | 95 | 88 | 93 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 80 | 80 |
| 81 | 76 | 83 | 76 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 70 | 70 |
| 13 | 9 | 10 | 14 | காற்றின் வேகம் (கி.மீ /மணி) | 10 | 10 | 12 | 12 | 10 |
| வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.. 01.01.2025, 02.01.2025, 03.01.2025 மற்றும் 05.01.2025 ஆகிய தினங்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 - 30 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 25 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| நெல் | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்துப் பகுதி வெர்காயத் தாள் போல் மாறி கதிர்கள் வெளிவராது. இதன் பரவலை தடுக்க, மழை நின்ற பின் , குளோர்பைரிபாஸ் 20 EC 500 மில்லி , எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும் அல்லது பிவேரியா பேசியானா 5 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீரில் பயன்படுத்தவும். |
| | | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், அதிக அளவு தழைச்சத்து உரத்தை இடுவதை தவிர்க்கவும், களைகளை கட்டுப்படுத்தவும் மற்றும் டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் @ 2 CC நாற்ப்பதாயிரம் முட்டை ஒட்டுண்ணிள்/ ஏக்கர் என்ற அளவில் பயன்னடுத்தவும். பாசலான் 35 EC 1500 மிலி எக்டருக்கு அல்லது கார்போசல்பான் 6 % G குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ தூவவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | தற்போது இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவே ஆடு, மாடு குறிப்பாக இளம் கன்றுகளை திறந்த வெளியில் விடக்கூடாது. இரவு நேர்களில் கொட்டகைகளில் வெப்பமூட்டிகளை பயன்படுத்தவும். |

## குறுஞ்செய்தி

வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும்.

**இயக்குநர்**